මුදල්, ආර්ථික ස්ථායීකරණ සහ ජාතික ප්‍රතිපත්ති අමාත්‍යාංශය
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMIC STABILIZATION AND NATIONAL POLICIES

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01, இலங்கை. | The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011-2484500, 011-2484600, 011-2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011-2449823
වෙබ් අඩවිය / இணையதளம் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/05-2022
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2022.09.02

தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபம்: 05/2022

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகள்

## வரவுசெலவுத்திட்ட அழைப்பு - 2023

## 2023 - 2025 நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் 2023 ஆண்டுக்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டல்கள்

### 01. பின்னணி

சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையின் பொருளாதாரம் தற்போது மிகவும் சவாலான நிலையை எதிர்கொண்டுள்ளது. இந்தச் சூழ்நிலையில், அரசாங்கச் செலவினங்கள் பெருமளவில் அதிகரித்து வருவதாலும், அரசாங்க வருமானம் கடுமையாக வரையறுக்கப்பட்டதாலும், அரசாங்கத்தின் கடன்பெறும் ஆற்றல் குறைந்து வருவதாலும் அரசிறைசார் நெகிழ்வுத்தன்மை (fiscal space) மிகவும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில், 2023 ஆண்டுக்கான தேசிய வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிப்பது மிகவும் சவாலானதாக மாறியுள்ளது.

மேற்கூறிய பின்னணியில், 2023-2025 நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள், 2023 ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதே இந்த சுற்றுநிருபத்தின் நோக்கமாகும்.

பொருளாதார நெருக்கடியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கையை மீட்டெடுத்தல், பலவீனமான பொருளாதாரக் குறிகாட்டிகள் மேலும் மோசமடைவதைத் தடுத்தல் மற்றும் தொடர்ந்து வருகின்ற பேரண்டப் பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளம் அமைத்தல் என்பவற்றை இலக்காகக் கொண்டு 2023 வரவுசெலவுத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்த வகையில், தற்போதைய நெருக்கடி நிலையை முகாமைசெய்வதில் "முழு அரசாங்க அணுகுமுறை" முக்கியமானது.

மேலும், குறித்த நிறுவனம் பற்றி மாத்திரம் கருத்திற் கொண்டு செலவின மதிப்பீடுகளைத் தயாரிப்பதற்குப் பதிலாக, செலவிடல் நிறுவனங்கள் அத்தகைய மதிப்பீட்டைத் தயாரிப்பதற்கு அப்பால் சிந்திக்க வேண்டுமென்பதுடன் அத்தகைய செலவினங்களுக்கு நிதியளிப்பதற்கான கட்டுநிதிக் கிடைப்பனவில் கவனம் செலுத்த வேண்டும்.

## 02. 2022-2025 நடுத்தரக் கால பேரண்டப் பொருளாதாரப் போக்கு

வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தை தயாரிப்பதில், நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார இலக்குகள் மற்றும் அரசாங்க கொள்கைகள் / முன்னுரிமைகளுக்கு ஏற்ப வருமானம் மற்றும் செலவினங்கள் செம்மையாக்கப்படுதல் வேண்டும். எனவே, 2023 வரவுசெலவுத்திட்டமானது, 2023 - 2025 நடுத்தரக் காலத்தின் இறுதியில் ஆரம்பக் கணக்கு மீதியில் மொத்த தேசிய உற்பத்தியில் 2 சதவீத மிகையினை அடைந்துகொள்வதை நோக்காகக் கொண்டு தயாரிக்கப்படுதல் வேண்டும்.

முதன்மை வரவுசெலவுத்திட்டப் பற்றாக்குறையை குறைப்பதற்கு அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பது முக்கிய தேவையாக இருந்தாலும், அரசின் வருமானத்தை அதிகரிக்க குறிப்பிட்ட கால அவகாசம் தேவைப்படுவதால், செலவினங்களைக் குறைப்பதற்கான மாற்றுவழிகளைத் தேடுதல் கட்டாயமாகி மாறிவிட்டது. பொதுச் சேவை வழங்கலின் தரத்தைப் பேணுகின்ற அதேவேளை, அரசாங்க செலவினங்களைக் குறைக்க, உற்பத்தித்திறனை அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

இதற்கமைய, 2023 வரவுசெலவுத்திட்ட தயாரிப்பின் கருப்பொருள் "குறைந்தபட்ச உள்ளீடுகளின் மூலம் மாற்றத்தை ஏற்படுத்துதல்" என்பதாக இருத்தல் வேண்டும். இக்கருப்பொருளானது ஒவ்வொரு பொது நிறுவனத்தின் பொதுவான நோக்கமாக மாறுதல் வேண்டும்.

## 03. முன்னுரிமை விடயங்கள் / துறைகள்

2023-2025 நடுத்தர காலப்பகுதிக்குள் மக்களுக்கும் நாட்டுக்கும் உடனடி நன்மை பயக்கக் கூடிய மற்றும் பொருளாதார நெருக்கடியால் பின்தங்கிய துறைகளை மேம்படுத்துவதன் மூலம் மக்களின் வாழ்க்கையை மீட்டெடுக்கும் கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித்திட்டங்களுக்கு எதிர்வரும் வரவுசெலவுத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படுதல் வேண்டும். அதன்படி, 2023 வரவுசெலவுத்திட்ட தயாரிப்பின் போது பின்வரும் பகுதிகளுக்கு / துறைகளுக்கு போதிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

i. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை நோக்கி உடனடியாக நகர்தல் மற்றும் தொடர்ச்சியான எரிசக்தி வழங்களினை உறுதி செய்தல்.
ii. பொது போக்குவரத்து சேவையை மேம்படுத்துதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல்.
iii. நாட்டிற்கு சாதகமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (Foreign Direct Investments - FDIs) ஊக்குவித்தல். (துரிதமாக அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் எதிர்கால பொருளாதார ஆற்றலின் மையமாக விளங்கும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கையின் நிலையை ஊக்குவித்தல், முதலீடுகளுக்கு உகந்த சூழலை உருவாக்குதல், துறைமுக நகரத் திட்டத்தைச் செயற்படுத்துதல், மூலதனச் சந்தை சீர்திருத்தங்கள் மற்றும் தொழிலாளர் சட்டச் சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல்.)
iv. நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள சுற்றுலாத் துறை மற்றும் சிறு-தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் தேவையான ஒத்துழைப்பினை வழங்குதல்.
v. தொழில் முனைவோர் ஊக்குவிப்பு, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் இளைஞர்களை பொருளாதார நடவடிக்கைகளின்பால் ஈர்ப்பதிற் கவனம் செலுத்தும் விசேட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள்.
vi. நாட்டில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்தல்.
vii. போட்டி ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் வர்த்தக தாராளமயமாக்கலினை தாபித்தல்.
viii. வெளிநாட்டுப் பணம் அனுப்புகையினை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்.
ix. நட்டத்தில் இயங்கும் பொது நிறுவனங்களை மறுசீரமைத்தல் அல்லது மூடுதல், ஒத்த செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களை ஒன்றிணைத்தல், சிறந்த நிறுவன நிர்வாகத்தை வலுப்படுத்ததல் மற்றும் அரசுக்குச் சொந்தமான

iv. பேரண்டப் பொருளாதார செம்மையாக்களினால் பாதிக்கப்படக்கூடிய குழுக்களின் பாதகமான விளைவுகளை குறைப்பதற்கு குறுகிய கால விசேட சமூகப் பாதுகாப்பு திட்டத்தை அறிமுகம்செய்தல்.

v. நீண்டகாலமாகத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டுவரும் "மானிய நிகழ்ச்சித்திட்டங்களை" மீளாய்வு செய்வதுடன், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் பயனாளிகளின் நீண்டகால வலுப்படுத்துகைக்காக செயலாற்றுதல், அவ்வாறு வலுப்படுத்தப்பட்ட பின்னர், ஆண்டுதோறும் நிவாரண திட்டத்திலிருந்து இலக்கிடப்பட்ட எண்ணிக்கையிலான பயனாளிகளை நீக்குதல்.

vi. நட்டத்தில் இயங்கும் பொது தொழில்முயற்சிகளை மறுசீரமைத்தல் / மூடுதல்.

vii. ஒத்த செயற்பாடுகளில் ஈடுபடும் நிறுவனங்களை ஒன்றிணைத்தல்.

viii. பயன்பாட்டினை மேம்படுத்தல் மற்றும் வருமானமீட்டும் நடவடிக்கைகளுக்கு சாத்தியமான ஆதனங்களைக் கண்டறியும் நோக்கத்துடன் அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்கள், நிலங்கள் மற்றும் வாகனங்கள் உட்பட அசையும் அசையாச் சொத்துக்கள் பற்றிய விரிவான ஆய்வினை கொப்றோலர் ஜெனரல் திணைக்களம் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் மூலம் நடத்துதல்.

ix. உத்தியோகபூர்வ வாகனம் ஒதுக்கப்பட்டுள்ள அலுவலர்கள் அல்லது வாடகை அடிப்படையில் உத்தியோகபூர்வ போக்குவரத்துத் தேவைகளுக்காக தனியார் வாகனங்களைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ள அலுவலர்கள், அவர்களுக்குரிய உரிமைகளை மட்டுமே அனுபவிப்பதை உறுதி செய்தல்.

## 05. செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தல்

அரசாங்கத்தின் மிகவும் வரையறுக்கப்பட்ட கடன் திறன் மற்றும் பொருளாதார மீட்சிக்கான குறுகிய கால திட்டங்களுக்குள் செலவினத்தைக் குறைப்பதற்கு முன்னுரிமை வழங்குவதைக் கருத்திற் கொண்டு, 2023-2025 காலப் பகுதிக்குள் செலவினமானது, முடிந்தவரை கடுமையான கட்டுப்பாட்டிற்குட்பட வேண்டும். மேலும், தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் குறைப்பதற்கு நிதியைப் பெற்றுக்கொள்ள முடியுமான வகையில், சில பெரியவிலான திட்டங்களுக்கு நிதியளிப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட வெளிநாட்டு நிதியை வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்த (repurposing) சில வெளிநாட்டு நிதி நிறுவனங்களால் ஏற்கனவே தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அதன்படி, எதிர்வரும் வரவுசெலவுத்திட்டத்தைத் தயாரிக்கும் போது, சில தேவைகள் மிகவும் அத்தியாவசிய தேவைகளுக்கானதாக மாற்றப்படுதல் வேண்டும். பாரம்பரியமாக அதிகளவு வளங்கள் பயன்படுத்தப்பட்ட சில துறைகளுக்கான ஒதுக்கீடுகள், பொருளாதாரத்திற்கு / நாட்டுக்கு நேரடி மற்றும் உடனடி நன்மை பயக்கின்ற, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கின்ற துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் வரையறுக்கப்படும்.

### 5.1 மூலதனச் செலவினம்

**i. நிறுவன மூலதனச் செலவினம்**

(அ) வாகனங்கள் கொள்வனவு தொடர்பான 03/2021 ஆம் இலக்க தேசிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபத்தினால் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் 2023 ஆம் ஆண்டிலும் எவ்வித மாற்றமுமின்றி தொடர்ந்திருக்கும்.

(ஆ) அரச நிறுவனங்களுக்குத் தேவையான புதிய அலுவலக உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் 2023 ஆம் ஆண்டில் சேர்க்கப்படக் கூடாது.

(எ) ஏற்கனவே கருத்திட்ட அலுவலகங்கள்/கருத்திட்ட முகாமைத்துவ அலகுகள் நிறுவப்பட்ட போதிலும், கருத்திட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படாத போதும் எதிர்காலத்தில் செயற்படுத்துவது நிச்சயமற்றதான நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் தொடர்பான அலுவலகங்கள் / அலகுகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் வரை அவற்றை இடைநிறுத்தல் வேண்டும்.

(ஏ) மறுபயன்பாட்டு நோக்க வெளிநாட்டு நிதியுதவி திட்டங்களுக்கான ஒதுக்கீட்டுக் கோரிக்கையின் போது, ஆரம்பக் கருத்திட்டத்திற்குள் ஒதுக்கீடுகள் சேர்க்கப்பட வேண்டுமா அல்லது மறுபயன்பாட்டு நோக்க பணிக்கான ஒதுக்கீடுகளுக்கான செலவினத் தலைப்பின் கீழ் சேர்ப்பதா என்பது குறித்து விரிவாக ஆராய்ந்து உரியவாறு ஒதுக்கீட்டினைச் சேர்த்தல் வேண்டும்.

(ஐ) தனியார் துறையிலிருந்து நேரடி முதலீடு அல்லது பொது-தனியார் கூட்டுப் பங்காண்மைக்குச் சாத்தியமான கருத்திட்டங்களின் வடிவத்தில் புதிய கருத்திட்டங்களை ஆரம்பிப்பது ஊக்குவிக்கப்படும் அதே நேரத்தில், பாரம்பரிய அரசாங்க முதலீடுகள் மூலம் புதிய கருத்திட்டங்களை செயற்படுத்துவது ஊக்கமளிக்கப்படமாட்டாது. பொது-தனியார் கூட்டுப் பங்காண்மையின் கீழ் ஆரம்பிக்கப்படும் கருத்திட்டங்களுக்கு அரசின் நிதிப் பங்களிப்பை குறைந்தளவில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், கருத்திட்டத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மூலம் முடிந்தவரை செலவினங்களை ஈடுசெய்யும் திறன் கொண்ட வியாபார மாதிரிகள் (business models) தயாரிக்கப்படுதல் வேண்டும். அந்த வகையில், கருத்திட்டத்தின் மொத்தச் செலவு, அரசாங்கத்தினால் உரிய தனியாருக்குச் செலுத்தப்படும் வருடாந்த கொடுப்பனவுகள் (annuity payments) மூலம் தீர்ப்பதற்கு திட்டமிட்ட வியாபார மாதிரிகளைக் கொண்ட கருத்திட்டங்களைத் தொடங்கக்கூடாது.

### 5.2 மீண்டெழும் செலவினம்

மீண்டெழும் செலவினங்களுக்கான மதிப்பீடுகளை தயாரிப்பதில் பின்வரும் விடயங்கள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்

**i. சம்பளங்கள், ஊதியங்கள், மேலதிகநேர மற்றும் பிற கெடுப்பனவுகள்**

(அ) 2023 இல் அரசாங்க சேவைக்கு புதிய ஆட்சேர்ப்பு செய்யப்படமாட்டாது. எனவே, இந்த நோக்கத்திற்காக எந்த ஒதுக்கீடும் செய்யப்படமாட்டாது. மேலும், 03/2022 ஆம் இலக்க வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருபத்தில் வழங்கப்பட்டுள்ள சம்பளத்திற்கு மேலதிகமாக செலுத்தப்படும் கொடுப்பனவுகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் 2023 ஆம் ஆண்டிற்கும் ஏற்புடையதாகுதல் வேண்டும்.

(ஆ) 2023 ஆம் ஆண்டிற்கான சம்பளம், ஊதியம் மற்றும் பிற கொடுப்பனவுகள் 2022.08.01 அன்றுள்ளவாறு ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் ஒவ்வொரு அலுவலருக்கும் தனித்தனியாக கணக்கிடப்பட வேண்டும். அதேசமயம், இதன் விவரங்கள் நிறுவன மட்டத்தில் தயாரிக்கப்பட்டு பின்னிணைப்பு 3 இலுள்ள படிவத்திற்கேற்ப சமர்ப்பித்தல் வேண்டும். செலவின குறியீடு 1503 இன் கீழ் தனிப்பட்ட ஊதியங்களுக்கான ஏற்பாடுகளைப் பெறும் அலுவலர்கள் தொடர்பான விவரங்களும் இந்த படிவத்தில், அந்தந்த நிறுவனத்திற்குத் தனித்தனியாகச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

2023-2025 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால வரவுசெலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் 2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளையும், 2024- 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட மதிப்பீட்டு எதிர்வுகூறல்களையும் உள்ளிடுவது கட்டாயமாகும். மேலதிகமாக, அத்தகைய ஆவணங்களின் பிரதிகளை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதேனும் உதவி தேவைப்பட்டால், 011-2484999 என்ற இலக்கத்தினூடாக ITMIS உதவி மைய அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளவும்.

**09. தெளிவுபடுத்தல்**

மேலும் ஏதேனும் தெளிவுபடுத்தல் தேவைப்படின், உங்கள் அமைச்சு / திணைக்களம் / நிறுவனம் தொடர்பான விடயத்திற்குப் பொறுப்பான தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தின் தொடர்புடைய பதவிநிலை அலுவலரைத் தொடர்பு கொள்ளவும்.

**ஒப்பம்/ கே.எம். மஹிந்த சிறிவர்தன**
**திறைசேரியின் செயலாளர்**

பிரதிகள்:

1. சனாதிபதியின் செயலாளர்
2. பிரதமரின் செயலாளர்
3. அமைச்சரவையின் செயலாளர்
4. கணக்காய்வாளர் நாயகம்